**தலைப்பு 205 – பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட

கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 1645(அ) | திணைக்களத்திற்கு சொந்தமான 2 வாகனங்கள் பேணப்பட்டிராததுடன், 7 வாகனங்களுக்காக சம்பவக் குறிப்பு புத்தகம் பேணப்பட்டிராத போதிலும், அவை நாளதுரையாக்கப் பட்டிருக்கவில்லை. | வாகனங்களுக்காக சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படாத 02 வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்களின் வாகன ஓட்ட நிலமைகள் காணப்படவில்லை. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய மற்றும் 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | திணைக்களத்திற்கு சொந்தமான 9 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிரு | அனைத்து வாகனங்கள் தொடர்பிலும் சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் பரிசோதனை யொன்று | எதிர்காலத்தில் அந்த ஒப்படைக்கும் போது அனுமதிப் பத்திரத்தினை வழங்குமாறு நீதிமன்றங்கள் அமைச்சிற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | க்க வில்லை. | மேற்கொள்ளப் படவேண்டியமை | கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) | 2018 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | நீதிமன்றங்கள் அமைச்சு வழங்கியிருந்த வாகனமொன்றின் உரித்தினை தீர்ப்பதற்கு 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப் படும் வாகனங்களின் பதிவு உரித்தினை தீர்க்க வேண்டியமை. | உரித்தினை ஒப்படைக்கும் போது அனுமதிப்பத்திரத்தினை வழங்குமாறு நீதிமன்றங்கள் அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய பொறுப்புக்களின் பெறுமதி போட்டிகளின் பிரகாரம் ரூபா 644,004 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 72,319 ஆனமையால் ரூபா 571,685 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | ஆண்டிற்குரிய பொறுப்புக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டியமை | நிதியேற்பாடுகளில் எஞ்சியிருந்த போதிலும், அதற்குரிய பட்டியல்கள் கணக்கு தீர்ப்பதற்கு முன்னர் கணக்குகள் பிரிவிற்கு கிடைத்திருக்காமையால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த முடியாதிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணத்தின் 94(1) இன் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளை விஞ்சி செலவினங்கள் அல்லது கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாத போதிலும், அதற்கு முரணாக 04 செலவினங்களுக்காக எஞ்சிய நிதியேற்பாடுகளான ரூபா 169,844 ஆன தொகையை விஞ்சி ரூபா 575,082 ஆன பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன. | ஏற்பாடுகளின் பிரகாரம் நிதி ஏற்பாடுகளை விஞ்சி எந்தவொரு செலவினம் அல்லது கடப்பாடொன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டியமை. | இந்த செலவினங்களுக்குரிய பட்டியல்கள் கணக்குகளை தீர்ப்பதற்கு முன்னர் கணக்குகள் பிரிவிற்கு கிடைத்திராமையால் அது தொடர்பில் அறிந்திராமையால் அந்த செலவினங்களை கருத்திற் கொள்ளாது ஏனைய செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டமையின் அடிப்படையில் நிதியேற்பாடுகள் போதுமானதாக இருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்புக்கள் மற்றும் பூதங்களுக்குரிய பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட மூலதன, முதலீட்டு, வருமான கட்டணங்கள் மற்றும் ஏனைய கட்டணங்களாக மீளாய்வாண்டின் போது ரூபா 16.60 மில்லியனான தொகையொன்று திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், இந்த வருமானங்கள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டினுள் எதிர்பார்க்கப்பட்ட வருமானங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். | இந்த வருமான மதிப்பீட்டு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாமை குறைபாடொன்றாக ஏற்றுக்கொள்வதுடன், எதிர்காலத்தில் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றனர். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டத்தினை பெற்றிராமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது 267 நலனாளிகளுக்காக ரூபா 8.49 மில்லியனான புண்ணிய உதவிகளை செலுத்த எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 55 நலனாளிகளுக்காக ரூபா 2.78 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | மதிப்பீகளை தயாரித்தல் உரிய கற்கையொன்றின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | இதற்கு முன்னர் கடந்து போன சில வருடங்களின் தரவுகளை பயன்படுத்தி அதற்கமைய மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) சமய ஸ்தலங்களின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தியின் கீழ் 493 சமய ஸ்தலங்களை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அடையப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றம் 57 சதவீதம் ஆகும். எனினும், | மதிப்பீகளை தயாரித்தல் உரிய கற்கையொன்றின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | எதிர்பாராதவாறு திணைக்களத்தின் கட்டிட அபிவிருத்தி பணிகளுக்காக பணம் வழங்கியமை, நிறுவுனர்களின் அவசரத் தேவைப்பாடுகளின் பிரகாரம் தீர்மானம் வேறுபடல், விசேட புலனாய்வு நடவடிக்கைகளால் தற்காலிக கொடுப்பனவு பணிகள் தாமதித்தமை, சமய |

| | | |
|---|---|---|
| நிதிச் செயன்முன்னேற்றம் 118 சதவீதம் ஆனமையால் மதிப்பீடுகளை தயாரிக்கும் போது உரிய கற்கையொன்றினை மேற்கொள்ளாது மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | ரீதியான உதவிகளுக்காக உரிய முறையில் கேள்வி இல்லாதிருந்தமை போன்ற காரணங்களால் பௌதீக செயன்முன்னேற்றம் குறைவடைந்து நிதி செயல் முன்னேற்றத்தில் ஓரளவு அதிகரிப்பொன்று இடம்பெற்றுள்ளது. |

**3.3 எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 12 தோட்டங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 14.28 மில்லியனான இலாபமொன்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், உள்ளபடியான இலாபம் 1.59 மில்லியன் ஆனமையால் அடையப்பட்ட முன்னேற்றம் 11 சதவீதம் ஆகும். மேலும், 2017 ஆம் ஆண்டின் போது இந்த தோட்டங்களிலிருந்து ஈட்டப்பட்ட ரூபா 11.25 மில்லியனான இலாபத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 86 சதவீதத்தால் இலாபம் குறைவடைந்திருந்தது. | தோட்ட நிர்வாகம் முகாமைத்துவம் தொடர்பில் நிலவும் சிக்கல்களை மீளாய்வு செய்து வருமானத்தை அதிகரிப்பதற் குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அனைத்து தோட்டங்களிலிருந்தும் அரச கட்டணங்களாக ரூபா 1,885,746 செலுத்தப்பட்டிருந்தமை, முஹாந்திரம் ஜயவிக்கிரம பூதலிற்காக வருமானம் கிடைக்காமை, 2018 ஆம் ஆண்டில் இறப்பரின் சராசரி விலை மட்டமானது குறைவடைந்தமை மற்றும் களுத்துறை ரிமான்ட் பார்க் வத்த இல் இறப்பர் பயிரிடல் மற்றும் மத்தக வத்தயில் மீண்டும் தேயிலை பயிரிடுவதற்காக செலவிடப்பட்டடை இதற்கான காரணங்களாக அமைந்துள்ளது. |
| (ஆ) மீளாய்வாண்டின் போது 5 தோட்டங்களிலிருந்து ரூபா 4.41 மில்லியனான நட்டம் பெறப்பட்டிருந்த போதிலும், தோட்டங்களை ஒப்படைப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் போது அந்த நிலைமை பாதகமாக முறையில் தாக்கமளித்திருந்தது. | தோட்ட நிர்வாக பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மற்றும் முகாமையினால் தோட்ட நிர்வாகம் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | திணைக்களத்திற்காக முன்னனுபவமுள்ள அத்தியட்சகர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், தோட்ட நிர்வாகத்தினை முறைமைப்படுத்துவதற்காக துறையில் நிபுணத்துவம் வாய்ந்த மதியுரையாளர்களின் சேவையினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மிகவும் செயற்திறனான முகாமைத்துவத்தினூடாக |

| | | |
|---|---|---|
| | | நட்டமீட்டிய தோட்டங்களை இலாப நிலைக்கு மாற்றுவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கப்பட்டவாறு உள்ளதுடன், எதிர்காலத்தில் இலாபத்தினை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. |

**3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதி 01 தோட்டத்தின் பூதல் நம்பிக்கைப் பொறுப்பு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதி வரையிலும் அறிக்கையிடப்பட்ட இலாபம் / நட்ட நிலைமை செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள தோட்டங்கள் கையளிக்கப்படும் வகையில் அதன் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டியமை. | திணைக்களத்தின் நிர்வாகப் பணிகளுக்காக 2013 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்ட என்.பீ.ஏ சில்வா விஜேசிங்ஹ பூதல்களுக்குரிய வனங்கல்ல வத்தியிருந்த திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிட்டு உரிய தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கியமையின் மூலம் அந்த நட்டம் தொடர்பில் திணைக்களத்தின் பணியானது நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதனால் 2018 ஆம் ஆண்டிற்கு அந்த காணியில் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த நம்பிக்கைப் பொறுப்பு, பூதல்களின் இறுதிக் கணக்குகள், வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த தோட்டங்களில் ஈட்டப்பட்ட இலாப / நட்ட நிலைமைகள் தொடர்பான தகவல்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட பல்வேறுபட்ட அறிக்கையின் மூலம் மற்றும் நம்பகத் தன்மையான தகவல்கள் முன்வைக்கப்பட வேண்டியமை. | தோட்டங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைக்காக ஆண்டின் ஆரம்பத்தில் காசு அடிப்படையில் மற்றும் இறுதிக் கணக்குகளுக்காக அட்டுறு அடிப்படையில் சீராக்கம் செய்யப்பட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் செயலாற்றல் அறிக்கையில் மற்றும் இறுதிக் கணக்குகளில் இலாப நட்ட நிலமைகளில் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் ரூபா 9.08 மில்லியனான கிரயத்திற்கான பெறுகை பணிகள் திட்டமிடப்பட்டிருந்ததுடன், ஆண்டினுள் பெறுகை நடவடிக்கைகளுக்காக ரூபா 8.79 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் பெறுகையிலான செயலாற்றல் தொடர்பான தகவல்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | செயலாற்றல் தொடர்பான தகவல்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் வெளிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | திணைக்களம் உயர்வான பெறுமதியுடனான பெறுகைகள் எதனையும் மேற்கொள்ளாமையால் அது தொடர்பான தகவல்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படாததுடன், எதிர்காலத்தில் பெறுகை நடவடிக்கைகள் தொடர்பான செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஈ) | வெளிநாட்டு நட்டஈட்டு செலுத்துதல் மற்றும் விஹார நட்டஈடுகளை விடுவிப்பதன் கீழ் மீளாய்வாண்டில் பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் கிடைத்த நட்டஈட்டு பெறுமதி தொடர்பான தகவல்கள் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக அறிக்கையை பயன்படுத்துவோருக்கு அந்தப் பிரிவுகளின் செயலாற்றல் தொடர்பான மதிப்பீடொன்றை மேற்கொள்ள முடியாதென்பது அவதானிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்களினுள் சரியான மற்றும் நம்பகத் தன்மையான தகவல்களை முன்வைக்க வேண்டியமை | வெளிநாட்டு நட்டஈடு செலுத்துதல் மற்றும் விஹாரை நட்டஈடுகளை விடுவித்தலின் கீழ் உரிய கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் நட்டஈட்டு பணம் தொடர்பான தகவல்கள் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதை குறைபாடொன்றாக ஏற்றுக்கொள்ளுகின்றேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 5/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2019 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2019 மே 31 ஆந் திகதி வரையிலம் அந்த அறிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2018 ஒக்தோபர் 10 ஆந் திகதி கணக்காய்விற்கு கிடைத்திருந்த போதிலும், திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும். 12 தோட்டங்களுக்குரிய பொருள் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களுக்குமான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். | திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் 12 தோட்டங்களுக்குரிய பொருள் மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்படாது இருந்தமையை ஏற்றுக்கொள்வதுடன் எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2007 சனவரி 27 ஆந் திகதிய வாகனமொன்று விபத்திற்குள்ளானமையால் ரூபா 254,038 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 104 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் நட்டத்தினை சாரதியிடமிருந்து அறவிடுவதற்காக 2007 மே 07 ஆந் திகதி அத்தனகல்ல மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் பின்தொடர்தலொன்று | நட்டம் மற்றும் சேதங்கள் பொறுப்புக்கூற வேண்டியவரிடமிருந்து அறவிடல் அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நீதிமன்றங்கள் அமைச்சிடமிருந்து மற்றும் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்று எதிர்காலத்தில் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

மேற்கொள்ளப்படாமையால் பரிந்துரையின் அடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

**3.7 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வெளிநாட்டு வேலைவாய்ப்பொன்றில் ஈடுபட்டுள்ள போது பல்வேறு காரணங்களின் காரணமாக மரணமடையும் நபர்களுக்காக வெளிநாட்டு விவகார அமைச்சினூடாக கிடைக்கும் நட்டஈட்டுத் தொகைகள், சம்பளம் மற்றும் படிகள் போன்றன அவர்களின் சட்டரீதியான உரித்தாளர்களுக்கு செலுத்தும் பொறுப்பானது திணைக்களத்திற்கு காட்டப்பட்டுள்ளது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் ரூபா 175.29 மில்லியன் கூட்டுத்தொகையான வெளிநாட்டு நட்டஈடுகள் 335 செலுத்த வேண்டியதாக உள்ளதுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 477.86 மில்லியனான வெளிநாட்டு நட்டஈட்டு விண்ணப்பங்கள் 170 கிடைத்திருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது விடுவிக்கப்பட்ட விண்ணப்பங்கள் எண்ணிக்கை 113 மாத்திரம் ஆனதுடன், அதன் பெறுமதி ரூபா 275.92 மில்லியன் ஆகும் அதற்கமைய திணைக்களத்திற்கு கிடைக்கும் நட்டஈட்டுத் தொகை விண்ணப்பங்களை விடுவிப்பதிலான தாமதமொன்று அவதானிக்கப்பட்டது. | நட்டஈட்டு உரித்தாளர்கள் தொடர்பான தகவல்கள் தொடர்புடைய அரச நிறுவனங்களினூடாக தேடிக் கண்டறிவதற்கு (வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், கிராம உத்தியோகத்தர்கள் போன்ற) நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை மற்றும் வெளிநாட்டு நட்டஈட்டினை விடுவிப்பதற்கு செயற்திறனாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | நட்டஈட்டு விண்ணப்பங்களை விடுவித்தல் திணைக்களத்தின் தாமதமொன்றல்ல என்றும், உரித்தாளர்கள் தொடர்பான தகவல்கள் இல்லாதிருந்தமை, உரித்தாளர்கள் அறிவிக்கப்பட்ட போதிலும், நட்டஈட்டினை பெற்றுக் கொள்ள வருகைதராமை, வெளிநாட்டு விவகார அமைச்சினால் தகவல்கள் கிடைக்காமை, உரித்தாளர்களை கண்டறிவதற்கு வழக்கு தொடரப்பட்டிருந்தமை மற்றும் சில உரித்தாளர்கள் வெளிநாடு சென்றிருந்தமை போன்ற விடயங்கள் இதற்கு காரணமாக அமைந்திருந்தது. |
| (ஆ) 4 துண்டுகளாக்கப்பட்டிருந்த | அரசிற்கு | இந்த பணம் எதிர்வரும் |

| | | | |
|---|---|---|---|
| | சயிமன்டெல் வத்த எனும் காணியின் துண்டு இலக்கம் 3 மற்றும் 4 இற்குரிய சுமார் 16 ஏக்கர்களுக்காக 2014 ஆம் ஆண்டில் கிடைத்த நட்டஈடுகளுக்குரியதாக 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் பெற வேண்டிய வட்டியான ரூபா 5.64 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சுவீகரிக்கப்பட்ட பூதல் காணிகளுக்குரிய நட்டஈட்டுப் பணம் மற்றும் வட்டிப் பணத்தை பூதலுக்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | சில மாதங்களில் கிடைப்பதற்குள்ளது. |
| | அவ்வாறே, 16 ஏக்கர்கள் 01 ரூட் 35 பேர்ச்சுடனான காணித் துண்டு இலக்கம் 01 மற்றும் 02 இற்காக உரித்தாக்கக்கூடிய ரூபா 2.63 மில்லியன் நட்டஈட்டுத் தொகை மற்றும் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் பெற வேண்டிய ரூபா 6.64 மில்லியனான வட்டித்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 16 ஏக்கர் 2 ரூட் 17 பேர்ச்களைக் கொண்ட ‘‘மத்தேகொட வயல் காணி, மொரட்டுவ’’ எனும் பெயருடைய காணியில் 11 ஏக்கர் 20.1 பேர்ச் அளவானது கொழும்பு மாவட்டச் செயலகத்தினால் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், 3 ஏக்கர்கள் 1 ரூட் 30 பேர்ச் அளவானது 1999 யூன் 21 ஆந் திகதி அதி விசேட வர்த்தமானியினூடாக அரசிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மேலும் 2 ஏக்கர்கள் 7 பேர்ச் அளவானது பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் காணப்பட வேண்டிய போதிலும், அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை . | பூதல்களுக்குரிய காணிகளின் பௌதீக உரித்து பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டியமை. | இந்த காணிகள் இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மேற்படி காணியிலிருந்து அரசிற்கு சுவீகரிக்கப்பட்ட 3 ஏக்கர்கள், 01 ரூட் 30 பேர்ச் அளவான 5 காணித் துண்டுகளுக்கு துண்டாக்கப்பட்டிருந்ததுடன், 2012 நவம்பர் 19 ஆந் திகதி ரூபா 885,000 ஆன நட்டஈடொன்று துண்டு 1, 2 மற்றும் 5 இற்கு உரித்தாகியிருந்தது. எனினும், நட்டஈட்டுத் தொகைக்கு மேலதிகமாக 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உரித்தாக வேண்டிய 7 சதவீதமான நட்டமான ரூபா 841,827 ஆன பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் துண்டு இலக்கம் 3 மற்றும் 4 இற்காக பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் உரித்து உறுதி செய்யப்பட்டு அதற்குரிய நட்டஈட்டுத் தொகைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரசிற்கு சுவீகரிக்கப்பட்ட பூதல் காணிகளிற்கு நில நட்டஈட்டுத் தொகை மற்றும் வட்டித் தொகையை பூதலுக்குப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 3, 4 பகுதிகளுக்குரிய நட்டஈட்டுத் தொகையாக இதுவரையிலும் கிடைத்திருக்கவில்லை. நட்டஈடு மற்றும் வட்டித் தொகையை அறவிடுதல் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| (உ) | 41 ஏக்கர்கள் 2 ரூட் 9 பேர்ச் அளவான ''மஹரகம கடுவாவல அம்பகஹபுர'' எனும் பெயருடைய காணியில் 1 ஏக்கர் அளவானது 2006 திசெம்பர் 06 ஆந் திகதி அரசிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன், 2014 சனவரி 16 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்தக் காணியில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 29 மில்லியன் ஆகும். நட்டஈட்டு தொகைகளுக்காக உரித்துக்கோரும் தரப்பினரின் எதிர்ப்புக்கள் காரணமாக இந்த காணிகள் தொடர்பில் வழங்க்கொன்று விசாரிக்கப்பட்டவாறு உள்ளதுடன், நட்டஈடு மற்றும் வட்டித்தொகை ஆகியவற்றை பெறமுடியாதிருந்தது. மேலும். இந்தக் காணியின் 31 பேர்ச் அளவான பகுதியை விற்பனை செய்து இந்த பணம் | அரசிற்கு சுவீகரிக்கப்பட்ட பூதல் காணிகளுக்குரிய நட்டஈட்டுத் தொகை மற்றும் வட்டித் தொகையை பூதலுக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை மற்றும் பூதல் உரிமையாளர்களின்வருப்பங்கள் நிறைவேற்றப்பட வேண்டியமை. | வழக்கு நடவடிக்கைகள் நிறைவடைந்ததும் உடனடியாக உரிய நட்டஈடு தொகையை அறவிடுவதற்கு எடுக்கப்பட வேண்டும் என்பதை அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | டி.எஸ்.டபிள்யூ சமரக்கோன் நம்பிக்கைப் பொறுப்பிற்கு பெற்றுக்கொள்ள 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | 141 ஏக்கர்கள் 2 ரூட் 9.62 பேர்ச் கொண்ட ‘‘ரெஜிடேல் வத்த’’ எனும் பெயருடைய காணியில் 134 ஏக்கர்கள் 01 ரூட் 25.92 பேர்ச் அளவானது பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசிறகு சுவீகரிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய காணியான 7 ஏக்கர் 01 ரூட் 23.7 பேர்ச் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | பூதலுக்கு சொந்தமான காணிகளின் பௌதீக உரித்து பொறு நம்பிக்கைப் பொறுப்பாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன், பூதலாளரின் விருப்பம் நிறைவேற்றப்பட வேண்டியமை. | 1 ரூட் 2.62 பேர்ச் அளவான காணியானது 2018 ஆகஸ்ட் 10 ஆந் திகதி நீதிமன்ற கட்டளைகளின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் மாதாந்தம் ரூபா 25,000 ஆன தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய காணித்துண்டு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதாக உள்ளது. |
| (எ) | ரெஜிடேல் வத்த காணிக்காக முன்வைக்கப்பட்ட கோவைகளுக்கமைய அரசிற்கு சுவீகரிக்கப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்பட்ட 56 ஏக்கர்கள் 2 ரூட் 22.5 பேர்ச் அளவான காணிக்காக ரூபா 3.83 மில்லியன் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணம் உண்மையாக கிடைத்தமையை உறுதிப்படுத்தும் தகவல்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை . மேலும், 1 ஏக்கர் 2 ரூட் 18.46 பேர்ச் அளவான காணித்துண்டு 2009 யூன் 02 ஆந் திகதி கைமாற்றப்பட்டு 2011 மார்ச் 23 ஆந் திகதி திணைக்களத்திற்கு மீள கையளிக்கப்பட்டு இது வரையிலும் 9 வருடங்கள் கடந்திருந்தது. எனினும், அந்த காணிகளை விற்பனை செய்து உரிய பணத்தை டி.எஸ்.டபிள்யூ.சமரக்கோன் பூதலுக்கு வைப்புச் செய்ய தணைக்களம் தவறியிருந்தது. | பூதல்கள் தொடர்பில் சரியான தகவல்கள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் வைத்திருக்க வேண்டியமை மற்றும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் பொறுப்பினை துரிதமாக நிறைவேற்றி பூதலாளரின் விருப்பங்கள் நிறைவேற்றப்பட வேண்டியமை. | இந்தப் பணம் கிடைத்தமையை உறுதிப்படுத்துவதற்குரிய தகவல்களை தற்போது காணப்படும் கோவைகளில் தேடிக் கண்டறிய முடியாதுள்ளது. கைமாற்றப்பட்ட காணியின் உறுதிப்பத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2017 மார்ச் 29 ஆந் திகதியாகும். இந்த தாமதத்தினால் காணிகளை விற்பனை செய்யும் பணிகள் தாமதமடைந்துள்ளது. |
| (ஏ) | டி.எஸ்.டபிள்யூ.சமரக்கோன் பூதலுக்குரிய 6 வீடுகள் 1973 | பூதல் தொடர்பில் சரியான | தற்போது காணப்படும் கோவைகளுக்கமைய |

| | | |
|---|---|---|
| இன் 1 ஆம் இலக்க ஆதனங்கள் உச்ச சட்டத்தின் கீழான 1983 மார்ச் 25 ஆந் திகதிய அரச வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேசிய வீடமைப்பு திணைக்களத்திற்கு சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அத் திகதியில் கணிப்பிடப்பட்ட ரூபா 322,438 தொகையான நட்டஈட்டுத் தொகை மற்றும் அதற்குரிய வட்டித் தொகையும் கிடைத்தமைக்கான எழுத்துமூல சான்றுகள் முன்வைக்கப்படவில்லை. மேலும், உரிமையாளர்களின் இறுதி விருப்புப் பத்திரத்தின் பிரகாரம் பியந்தல மருத்துமனையின் வாட்டுத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான வாட்டுத் தொகுதியை நிர்மாணித்தல்களை சான்றுகள் காணப்படவில்லை. | தகவல்கள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் வைத்துக் கொள்ளப்பட வேண்டியதுடன், பூதல் உரிமையாளரின் விருப்பங்கள் நிறைவேற்றப்பட வேண்டியமை. | நட்டஈட்டுத் தொகை கிடைத்தமைக்கான சான்றுப்படுத்துவதற்கான காரணங்களை தேடுதல் கடினமொன்றாக அறியத்தருகின்றேன். சமரக்கோன் அவர்களின் தாயாரின் பெயரில் பெயரிடப்பட்ட வாட்டுத் தொகுதியொன்றை நிர்மாணித்தல் இடம்பெறாத போதிலும், இதுவரையிலும் பெருந்தொகையான உதவு தொகை பிலியந்தல மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது. ரூபா 1.7 மில்லியன் தொகையானது சிங்க சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், இந்த பணத்தை பயன்படுத்தி மருத்துவ உபகரணங்கள் உள்ளடங்கலான பெருமளவிலான பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அதன் கண்காணிப்பு பணிகளில் பங்குபற்றிய திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு காணக்கூடியதாக இருந்தது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ‘‘நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், மீளாய்வாண்டிற்குரியதாக திணைக்களத்தினால் தமது | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் தேவைப்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | இந்த திணைக்களம் மற்றுமொர்ு திணைக்களத்தை விட ஒப்பீட்டு ரீதியில் வேறுபட்ட தன்மையை கொண்டிருப்பதால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்குரிய இலக்குகளை அடைவதற்கு நேரடியான இயலுமையொன்று இல்லை.<br><br>எவ்வாறெனினும், மேற்குறிப்பிடப்பட்டவாறு இறுதி |

| | |
|---|---|
| விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்குரிய அடைவுகளும் இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | விருப்புப் பத்திரம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதிகளின் நோக்கங்கள் தொடர்பில் கவனத்திற் கொள்ளும் போது வறுமையினை ஒழித்தல், கல்வியை முன்னேற்றுதல் மற்றும் சுகாதாரப் பணிகளுக்காக பங்களித்தல் மூலம் சுழற்சி முறையில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கான உந்துதலாக உள்ளமையை குறிப்பிடுகின்றேன். |

## 5. நல்லாளுகை

----------------------

### 5.1 பொதுமக்களுக்கு சேவையை நிறைவேற்றுதல்

------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய இலக்கம் 5/2008 மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 05/2008(1) உடைய அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினதும் வதியுநர் / சேவை பெறுநர் விஞ்ஞாபனமொன்று தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | திணைக்களத்தினால் 2008 ஆம் ஆண்டின் போது வதியுநர் / சேவையுநர் விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதனை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. |